# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 30 வியாழக்கிழமை (13-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர்: 106


## வன்னியிலும், வாகரையிலும்

# மக்கள் அவலங்களை எடுத்து கூற செஞ்சிலுவைக் குழு தவறிவிட்டது!

## புலிகள் தரப்பில் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

வடக்கில் வன்னியிலும், கிழக்கில் வாகரையிலும் தமிழ் மக்கள் படும் அவலங்களை வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தவறிவிட்டதாக, தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மனித அழிப்புச் செயல்களை சர்வதேச நாடுகளுக்கு வெளிக் கொணராமல் தொண்டு நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புகளும் மௌனம் சாதித்து வருவதாகவும் விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் சாடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்த கண்டன அறிக்கையை ''கல்கத்தா ஸ்ரேற்மன்'' பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்ததாகத் தெரிவித்து ''த ஐலண்ட்'' பத்திரிகை அதனை மறுபிரசுரம் செய்துள்ளது.

ஏனைய செய்தி ஏஜன்சிகளும் விடுதலைப் புலிகளின் அறிக்கை குறித்துத் தகவல்களை வெளியிட்டுள்ளன.

வன்னிப் பகுதியில் சுமார் 5 லட்சம் தமிழர்களுக்குக் கடந்த இரண்டு மாதங்களாக உணவு எதுவும் விநியோகிக்கப்படவில்லை. ஆனால் இலங்கையில் இயங்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உட்பட தொண்டர் நிறுவனங்கள் இது விடயத்தை வெளிக் கொணரவில்லை; மௌனம் சாதிக்கின்றன.

றுவாண்டா, ஸயர் நாடுகளில் அகதிகள் படும் அவலங்களைப் பிரசாரப்படுத்தும் அளவுக்கு தமிழர்களின் துன்பதுயரங்கள் வெளிக்கொணரப்படுவதில்லை. தொண்டர் நிறுவனங்களும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப்பரவலாக்கல் நகல் திட்டம் நவம்பருக்கு முன் நாடாளுமன்றில்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் அடங்கிய நகல் சட்டம் நவம்பர் மாதத்திற்கு முன்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.''

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான தீர்வுத் திட்டம் பற்றிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனை எதிர்வரும் மே மாதமளவில் பூர்த்தியாகிவிடும். அதற்கான அரசமைப்புச் சட்டத் திருத்தமும் மே மாதமே தயாரிக்கப்பட்டு மக்கள் முன் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் அரசின் மூன்றாவது வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அரசமைப்புச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தமிழ் மக்கள் வடக்குக் கிழக்கில் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை முதலில் யோசித்துப்பார்க்க வேண்டும். அரசாங்க நிர்வாகத்திலும், அரசியல் தீர்மானங்களிலும் தமிழ் மக்கள் அந்நியப் படுத்தப்பட்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

நான் பாடசாலையிலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் 350க்கு மேற்பட்ட விடுதிகளில் பொலீஸார் சோதனை

## 475 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, மார்ச் 13

கொழும்பில் கடந்த இரு நாள்களில் சுமார் 350க்கு மேற்பட்ட விடுதிகளில் திடீர் சோதனைகளை நடத்திய பொலீஸார் 475 தமிழ் இளைஞர்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலைக் குழப்புவதற்காக விடுதலைப் புலிகளால் வகுக்கப்பட்ட இரகசியத் திட்டமொன்று பற்றிய விவரங்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் —

அத்திட்டத்தைச் செயற்படுத்த வடக்கில் இருந்து கொழும்புக்கு வந்த ஐந்து பேரைக் கைது செய்திருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் நடத்தப்பட்ட தேடுதலின்போது 15 கைக் குண்டுகளும் சில துப்பாக்கிரவைகளும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள ஐந்து விடுதலைப் புலிகளில் ராஜேந்திரன், ஜயமாலா ஆகிய தம்பதியினரும் அடங்குவர் என்றும் —

விடுதலைப் புலிகளின் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கே இவர்கள் தலைநகருக்கு வந்திருந்தனர் என்றும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (இ-ஐ)

### மூச்சந்தி முரளி



அப்ப ரணில் முந்திக் கொண்டார் போல ...!

## சுவரொட்டி போர் தெற்கில் உச்சக் கட்டம்

கொழும்பு, மார்ச் 13

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலையொட்டி தெற்கில் சுவரொட்டிப் போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஒருதரப்பு சுவரொட்டி ஒட்டி அடுத்த 24மணி நேரத்தில் மறுதரப்பு சுவரொட்டியை ஒட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுவரொட்டிப் போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வைத்திருப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை!

### 20 ஆண்டுகள் வரை சிறை

கொழும்பு, மார்ச் 13

அனுமதி இன்றி துப்பாக்கி வைத்திருப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக அரசாங்கம் அவசரகாலச்சட்ட விதிகளைப் பயன்படுத்த உள்ளது.

இத்தகைய ஆயுதங்களை வைத்திருப்போருக்கு அதிக

(8ஆம் பக்கம் பார்க்க)

## 3 துப்பாக்கிகளையும் ரணில் ஒப்படைத்தார்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் இருந்த மூன்று துப்பாக்கிகளையும் ஒப்படைக்குமாறு பொலீஸார் விடுத்த கோரிக்கையை ஏற்று தம்மிடம் இருந்த மூன்று துப்பாக்கிகளையும் அவர் ஒப்படைத்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் ரணில் விக்கிரமசிங்காவின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியதவசியம் என்றும் —

ஆனால் அவரின் பாதுகாப்பைக் குறைப்பதில் அரசு அக்கறை காட்டுவதாகவும் — ஐ. தே. க. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(இ-3-150)

## அழுகிய நிலையில் சடலம் ஒன்று நேற்று ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 13

குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இறந்தவரின் சடலம் எனத் தெரிவித்து, அழுகிய சடலம் ஒன்றை சாவகச்சேரி பொலீஸார் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சுமார் 30 முதல் 35 வயது மதிக்கத்தக்க அந்தச் சடலம் மிகவும் சிதைந்த நிலையிலும் அழுகியும் காணப்பட்டது; கிட்ட நெருங்க முடியாதவாறு துர்நாற்றம் வீசியது.

இறந்தவருக்கு ஒரு கால் இல்லை. ஜெய்ப்பூர்க் கால் பொருத்தியிருந்தார் எனத் தெரியவந்தது. சடலத்துடன் அந்தப் பொய்க் காலும் காணப்பட்டது.

சடலம் யாருடையது என்று இனங்காணப்படவில்லை. பிரேத பரிசோதனைக்காக அச் சடலம் ஆஸ்பத்திரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளுக்குச் சென்று வர அனுமதி

பூநகரி பாலாவியில் இருந்து வள்ளங்கள் மூலம் கடந்த திங்களன்று குருநகரை வந்தடைந்து பின்னர் சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் இராணுவத்தினரின் கண்காணிப்பில் தங்கவைக்கப்பட்டிருந்த 53 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரும் குறுகிய

(8ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் சிங்கராஜா

யாழ்ப்பாணம் கச்சேரியடி இல. 3, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் சிங்கராஜா 11-3-1997 அன்று வவுனியாவில் காலமாகி விட்டார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துரைராஜா (பயில்வான்) அவர்களின் மைத்துனரும், பிறேமா (வவுனியா), பாமா (பிரான்ஸ்), வசந்தி (யாழ். போதனா வைத்தியசாலை), ராசதுரை (பிரான்ஸ்), ராசகுமார் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும், கோபாலகிருஷ்ணன் (பொலீஸ் உத்தியோகத்தர், வவுனியா), வரதராஜா (பிரான்ஸ்), ஸ்ரீமோகன் (யாழ். மேல் நீதிமன்றம்), ரஞ்சினி (வவுனியா) ஆகியோரின் மாமனாரும், சசிரேகா, பானுரேகா, தினேசன், அனுசியன், அஜந்தன், அஜித், கௌசல்யா, வைஷ்ணவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீ. மோகன்
(மருமகன்)

கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (45765)

## திருமதி சத்தியநாதன் நாகரெத்தினம் (ஈசு ரீச்சர்)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி சத்தியநாதன் நாகரெத்தினம் 6 - 3 - 97 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சத்தியநாதனின் (கொழும்பு) அன்பு மனைவியும், சுரேஸ் (நோர்வே), சுரேந்தினி (நோர்வே), காலஞ்சென்ற யாழினி (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதாகரன் (நோர்வே), கீத்தா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுஷன், ஆர்த்தி, மிதுனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொறளை கனத்தை மயானத்தில் 10 - 03 - 97 அன்று நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி மயில்வாகனம் அன்னரத்தினம்.

25, கச்சேரி லேன்,
யாழ்ப்பாணம். (45756)

## திருமதி வீரகத்தி தெய்வானைப்பிள்ளை

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி வீரகத்தி தெய்வானைப்பிள்ளை 12 - 3 - 97 புதன் கிழமை காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குஞ்சித்தம்பி வீரகத்தியின் அன்பு மனைவியும், இராசம்மா, குஞ்சித்தம்பி (ஜேர்மனி), கோபாலகிருஷ்ணன் (கூட்டுறவுச் சங்க முகாமையாளர், துணுக்காய்), கைலாயபதி (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), தங்கராணி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), கலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா (முன்னாள் வர்த்தகர், சாவகச்சேரி), சிவநாதன் (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), கலா (ஜேர்மனி), சித்திரகௌரி (ஆசிரியர், பரணி பாலர் பாடசாலை, மீசாலை), ஞானேந்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும், குகநேசன், சதீஸ் (ஜேர்மனி), நிசாந்தன், தர்சிகா, சுகந்தன், சுதாகர், யாழினி, அஸ்வினி, நிராஞ்சலி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வாரித்தம்பி (இளைப்பாறிய உதவிக் கூட்டுறவு ஆணையாளர்) அவர்களின் சகோதரியும், ஞானகலாவல்லியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (13 - 3 - 97) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
இராசம்மா
(மகள்)

மீசாலை கிழக்கு,
மீசாலை. (45764)

## திருமதி பொன்னுச்சாமி இராசலட்சுமி (ரத்தினக்கா)

தாவடியைப் பிறப்பிடமாகவும், யாழ்நகர், சிறாம்பியடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி இராசலட்சுமி 19 - 02 - 97 அன்று கனகராயன்குளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமியின் (புகையிரத நிலைய அதிகாரி, மருதனார்மடம்) அன்பு மனைவியும், ரவீந்திரன் (பொறியியலாளர் — லண்டன்), தவராஜா (பொறியியலாளர் — வவுனியா), லலிதா, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், குலரட்ணம், முத்துவேல்ராயு (லண்டன்), குசேலா (லண்டன்), கௌசல்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், விசுனேஷ் (வட்டு தொழில் நுட்பக் கல்லூரி), ரமேஸ் (மலேசியா), பிரகாஷ், ஜெனகன் (லண்டன்), ஜெனனி (லண்டன்), சுகன்யா, கஜந்தன், முரளி (கனடா), தர்ஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
திருமதி கு. லலிதா
(மகள்)

273/11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (45758)

## சிற்றூழியருக்கு நியமனக் கடிதம்

யாழ். போதனா வைத்தியசாலையில் சேவையாற்றவெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள 70 சிற்றூழியர்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் தமது கடமையை ஆரம்பிப்பர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைத்து, யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவினால் அவர்களுக்கு வழங்கப்பட்டன. (இ-15)


**A/L Day Class**
**இந்துநாகரிகம்**
திரு. நித்தி
ஆரம்பம்:- **14-03-97**
வெள்ளி 8-00 a.m.
**SHAMROCK**
யா/ ஈச்சமோட்டை வீதி.
(45769)



வெளிவந்துள்ளது!
**நாமும் சுற்றாடலும் ஆண்டு 4**
**புதிய பாடத்திட்டம்**
புதிய பதிப்பு – 1997
வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
(45770)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### புதிய மாணவர்களை பதிவு செய்தல் 1996/ 97

மேற்படி கல்வியாண்டுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட, இதுவரை பதிவினை மேற்கொள்ளாத வன்னியிலுள்ள மாணவர்களுக்கு ஒட்டுசுட்டானில் இயங்கும் விவசாயபீடத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பதிவின்போது பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிக்கடிதம்.

2 பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி, நிழற்பிரதி)

3. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதி, நிழற்பிரதி)

4. புகைப்படங்கள் - 08 பிரதிகள் (கறுப்பு வெள்ளை 2'' x $2\frac{1}{2}$'')

5. க. பொ. த (உயர் தர) பெறுபேற்றறிக்கை

6. பதிவுக்கட்டணம்

மருத்துவம் - ரூ. 350/-
விஞ்ஞானம் - ரூ. 305/-
விவசாயம் - ரூ. 175/-
வர்த்தகம் / முகாமைத்துவம் - ரூ. 175/-
கலை - ரூ. 175/-

(புவியியலை ஒரு பாடமாக தெரிவு செய்யின் ரூ. 275/-)

பதிவாளர்
1997-03-11 (சி/293)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி தர்மவதி தர்மசிறீராஜா
அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி. த. வல்லிநாச்சி

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி,
கரவெட்டி.
(45762)

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதர் பெனடிற் (முன்னாள் தந்தித்தொலைதொடர்புமேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணம் 69/2 வேம்படி வீதியைச் சேர்ந்த இராமநாதர் பெனடிற் 12 - 03 - 1997 இல் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி மாகிறெற்றின் அன்புக் கணவரும், மேரிதிரேசா ஜெயப்பிரகாசம் (பிரதி அதிபர், யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்), சுபத்திரா பாலகாந்தன் (ஆசிரியை, கனடா), அன்ரன் தர்மபாலன் (விலை மதிப்பீட்டாளர், கொழும்பு), மேரி ஜெசிந்தா, மேரி லலிதா (ஆசிரியை, யாழ்/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்), மேரி ரஞ்சலினா (நோர்வே), மேரி ரஞ்சினி (ஆசிரியை, யாழ்/ புனித மரியாள் வித்தியாலயம்), மேரி யஸ்மின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் (நிருவாக அலுவலர், பிரதேச செயலகம், உடுவில்), பாலகாந்தன் (கனடா), திருப்பதி, கிறிஸ்ரி அல்பிறட் (புவனம்), பாலசுந்தரம் (அதிபர், யாழ்/ சென்றோக் வித்தியாலயம்), பெனடிற் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதா (3 ஆம் வருட விஞ்ஞான பீடம்- யாழ்/ பல்கலைக்கழகம்), சியாமளா (மருத்துவபீடம்- யாழ்/ பல்கலைக்கழகம்), பிரதீபன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), காண்டீபன் (கனடா), கீதா (கனடா), கோகுலன் (கனடா), ஜெயகாந்தன் (முதலாம் வருட முகாமைத்துவபீடம் - யாழ்/பல்கலைக்கழகம்), அரவிந்தன், ஆதித்தன் (யாழ்/பற்றிக்ஸ் கல்லூரி), வித்யா, கிரிதரன், கிரிஷாந்தன் (கொழும்பு), விசாகன் (றோயல் கல்லூரி), ஜனகன் (றோயல் கல்லூரி), விதுத்ரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13 - 03 - 1997 பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
எஸ். ஆர். ஜெயப்பிரகாசம்
(மருமகன்)

69/2 வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (45766)

## திருமதி சி. தவமணிதேவி
## செல்வி சி. தனலட்சுமி
## செல்வன் சி. திவாகரன்

வண்ணார்பண்ணை, கேசாவில் வீதியைச்சேர்ந்த சிவசுப்பிரமணியம் (மணியம்—சைக்கிள் கடை) அவர்களின் அன்பு மனைவி, திருமதி தவமணிதேவி, அன்புப் பிள்ளைகள் செல்வி தனலட்சுமி (வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர மாணவி), செல்வன் திவாகரன், ஆகியோர் கடந்த 19-2-97 அன்று நடந்த படகு விபத்தில் விடத்தல் தீவுக் கடலில் அகால மரணமடைந்தனர்.

இவர்களது இறுதிக் கிரியைகள் 21-2-97 அன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றுள்ளன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. தங்கராசா

கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (45757)

## திருமதி நித்தியானந்தன் குமுதினி

'கமலவாசம்' கரவெட்டி மேற்கு என்னும் முகவரியைப் பிறப்பிடமாகவும், 48, பிறேசர் அவனியூ, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியானந்தன் குமுதினி 11 – 03 - 97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் நித்தியானந்தனின் ('நித்சூ' — வெள்ளவத்தை) அன்பு மனைவியும், மார்க்கண்டு — கமலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், ஐயாத்துரை தம்பதிகளின் (காங்கேசன்துறை) மருமகளும், வர்ஷா காருண்யா, நிவேதிகா லாவண்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சித்தார்த்தன் (நோர்வே), கௌதமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், எலனி சித்தார்த்தனின் (நோர்வே) மைத்துனியுமாவார்.

இறுதிக் கிரியைகள் 13 - 03 - 97 இன்று கொழும்பில் நடைபெறும்.

இன்றைய தினம் அன்னாரின் அஞ்சலி நிகழ்வு வதிரி, ''ஸ்ரீகணேச வாசம்'' எனும் முகவரியில் இடம் பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
க. கமலேஸ்வரன்
(சிறிய தந்தை)

'சந்திரமஹால்'
வதிரி, அல்வாய். (45754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இள நூலகம்

# அல்பேனிய நெருக்கடியைத் தீர்க்க இடைக்காலப் பிரதமர் நியமிப்பு!

## கிளர்ச்சியாளரைச் சமாளிக்க ஜனாதிபதி முயற்சி

ரிரானா, மார்ச் 13

அல்பேனியாவில் இடம்பெற்று வரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில் அல்பேனிய அதிபர் சாலி பொரிஷாவும், எதிர்க்கட்சிகளும் இணைந்து பஷ்கின் பீனா என்பவரை இடைக்காலப் பிரதமராகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அல்பேனியாவின் தென்பகுதியைச் சேர்ந்த ஜிரோகாஸ்ரர் என்ற நகரத்தின் மேயராக பதவி வகித்த பீனா எதிர்க்கட்சியான சோசலிஷக் கட்சியின் முக்கிய உறுப்பினராவார்.

அல்பேனிய மக்களுக்கு நன்கு அறிமுகமான பீனா ஒரு பொருளாதார வல்லுனருமாவார்.

பீனாவின் சொந்த நகரமான ஜிரோகாஸ்ராவும் கடந்த வாரம் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்தது.

இதேவேளை —

அல்பேனியாவின் தென்பகுதியிலுள்ள ஆயுத களஞ்சியமொன்றை கடந்த செவ்வாயன்று கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர்.

'தேசியவிடுதலைக்கானகுழு' என்ற பெயரில் கிளர்ச்சியாளர்கள் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

அதிபர் பொரிஷா ராஜினாமா செய்ய வேண்டும் எனவும் விரைவில் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் வற்புறுத்தி வருகின்றனர். ஐ-10)

### சர்ச்சைக்குரிய யூதக்குடியிருப்பு விவகாரம்:

# சர்வதேச பிரதிநிதிகளை அழைத்து காஸாவில் அரபாத் நடத்தும் கூட்டம்

## அமெரிக்கா அழைக்கப்படுமா?

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகள் முடங்கிக் கிடக்கின்றன. அரபுப் பகுதியில் யூதக் குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தினை இஸ்ரேல் கைவிடுவதாக இல்லை. இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் எதுவித பயனையும் அளிக்காத நிலையில் பிரச்சினையை சர்வதேச அரங்கில் கொண்டு வர பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

இந்தப் பிரச்சினை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட்டதும், இஸ்ரேலுக்கு எதிராக அதில் தீர்மானம் எடுக்கப்பட்டதும், அத் தீர்மானத்தை தனது ''வீற்றோ'' அதிகாரத்தின் மூலம் அமெரிக்கா ரத்துச் செய்ததும் தெரிந்ததே.

அடுத்த சட்ட நடவடிக்கையாக அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் அரபு நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டமொன்றுக்கு யாசீர் அரபாத் அழைப்பு விடுத்துள்ளார். இக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காஸா நகரில் நடைபெறவுள்ளது.

முறையாக அழைப்பு விடுக்கப்படுமாயின் யாசீர் அரபாத் கூட்டும் சர்வதேச பிரதிநிதிகளின் கூட்டத்தில் அமெரிக்கா கலந்து கொள்ளுமென அமெரிக்க வெளியுறவு செயலக அறிவிப்பாளர் நிக்கலஸ் பேண்ஸ் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு மறைமுக ஆதரவாளனாக விளங்கும் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு இஸ்ரேலுக்கு முகத்தில் அடிப்பதுபோல் அமைந்துள்ளது என்று சில அவதானிகள் குறிப்பிட்டனர்.

இஸ்ரேலின் யூதக் குடியிருப்புத் திட்டம் சர்வதேச அரங்கின் முன் வைக்கப்படும் நிலையில் அந்நாடுகளின் அழுத்தங்கள் திணிக்கப்படுமென இஸ்ரேல் அஞ்சுகிறது.

அரபாத் எடுத்துவரும் இந்த முயற்சியானது இருதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையைத் தோற்றுவிக்கும் என இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவி பலஸ்தீனத்தை எச்சரித்துள்ளார். (ஐ-10)

# பிரிட்டனில் தொழிற்கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகரிப்பு

லண்டன், மார்ச் 13

இவ்வாண்டு மே மாத இறுதிப் பகுதியில் பிரிட்டனில் பொதுத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இத்தேர்தல்களை முன்னிட்டு இப்போது அபிப்பிராய வாக்கெடுப்புக்களும் நடத்தப்பட்டு வருகின்றன, அண்மையில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப் பொன்றின்படி பிரிட்டனின் எதிர்க்கட்சியான தொழிற் கட்சி 26 சத வீத புள்ளி வாக்குகளில் முன்னணியில் நிற்கின்றது.

வெள்ளியன்று வெளியான ரெய்லி ரெலிகிராப்பில் இந்த மதிப்பீடு வெளியிடப்பட்டிருந்தது.

தொழிற்கட்சியின் ஆதரவு 54 சதவீதத்தால் உயர்ந்திருப்பதாக அது கூறியது.

கன்சர்வேட்டிவ் கட்சியினருக்கு 6 சத வீதத்தால் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

### வெள்ளைமாளிகையில்

# தேநீர் மற்றும் உணவுச் செலவு மட்டும் 15 கோடி டொலர்!

வாஷிங்டன், மார்ச் 13

1993 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை அமெரிக்க அதிபர் மாளிகையில் தங்கிச் சென்ற சுமார் 938 விருந்தினர்களுக்கு தேநீர் மற்றும் உணவு வழங்குவதற்கு மட்டும் சுமார் 15 கோடி டொலர்செல விடப்பட்டுள்ளது.

அங்கு 1995 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கிறிஸ்மஸ் விழா விருந்துக்கு மட்டுமே சுமார் ஒன்றரைக் கோடி டொலர் செலவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாயன்று சமர்ப்பிக்கப்பட்ட இத் தகவல்கள் பிரதிநிதிகள் மத்தியில் அதிபரின் வெள்ளைமாளிகையின் ஆடம்பர வாழ்க்கை பற்றி பல கேள்விகளை எழுப்பியுள்ளன. (ஐ-10)

# பிலிப்பீன்ஸை பெரும் பூகம்பம் தாக்கியது!

மணிலா, மார்ச் 13

பிலிப்பீன்ஸ் நாட்டில் நேற்று பெரிய அளவிலான பூமி அதிர்ச்சி இடம்பெற்றிருக்கிறது.

கிழக்கு மின்ரனோ பகுதியை மையமாகக் கொண்டிருந்த இந்தப் பூமி அதிர்ச்சி ரிச்டர் அளவு கோலில் 5.9 ஆகப் பதிவானதாக முதலில் வெளியாகிய செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (ஐ)

**உலக அரங்கில்**

### ஓய்வூதியம் வழங்கக் கோரி

# பல்கலைக்கழக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த ஆறாயிரம் ஊழியர்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமையை வழங்குவது என அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததே இந்த அடையாள வேலை நிறுத்தத்துக்கு காரணம் எனவும், இது குறித்து அரசு கவனம் செலுத்தாவிடின் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை பற்றி ஆராயப்படும் என்றும் அனைத்து பல்கலைக்கழகதொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த ரத்னசிறி பெரேரா தெரிவித்தார். (ஐ-10)

# தென்மராட்சியில் 22 ஆயிரம் பேர் விசேட அ. அட்டை பெற்றனர்

தென்மராட்சி, மார்ச் 13

தென்மராட்சி பிரதேசத்தில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் இதுவரை 21 ஆயிரத்து 911 பேரது விசேட அடையாள அட்டைகள் பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவினரால் — அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டைகளில் தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தம் செய்யவுள்ளோர் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் எதிர்வரும் மார்ச் 18, ஏப்ரல் 1, 18, மே 2, 17 ஆகிய திகதிகளில் யாழ். செயலக அடையாள அட்டைகள் பிரிவில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விசேட அடையாள அட்டை கிடைக்காதவர்கள் கப்பலில் அல்லது விமானத்தில் பயணம் செய்வதன் பொருட்டு அடையாள அட்டை அவசரமாகத் தேவைப்படின் தத்தமது பிரிவு கிராம அலுவலர், பிரதேச செயலர்கள் ஆகியோரின் சிபார்சுக் கடிதத்துடன் யாழ். செயலக அடையாள அட்டைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு விசேட அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## நவாலிப் பகுதி விசேட அ. அட்டை

நவாலி கிராம சேவையாளர் பிரிவிலிருந்து விசேட அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் அடையாள அட்டைகள், அப்பகுதி கிராம சேவையாளரின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுகின்றன. (இ-100)

# குடாக்கடல் ஊடாக மேலும் பல குடும்பங்கள் யாழ். வர ஆயத்தம்

## திங்களன்று வந்து சேர்ந்தவர் தகவல்

பூநகரி பாலாவிப் பகுதியில் வசித்த பல குடும்பங்கள் யாழ். வருவதற்காக ஏற்கனவே வவுனியா ஊடாகத் திருமலை சென்றுள்ளனர். அங்கு எஞ்சியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பலர் குடாக்கடல் ஊடாக இரண்டொரு தினங்களில் இங்கு வந்து சேர ஆயத்தமாக இருப்பதைக் கண்டேன்.

பூநகரி — பாலாவிப் பகுதியில் இருந்து கடந்த திங்களன்று குடாக்கடல் ஊடாக குருநகரை வந்தடைந்த குருநகரைச் சேர்ந்த இளைஞரான அரியம் சுகந்தன் (வயது 21) 'உதயன்' செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பூநகரிப் பகுதியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் உலர் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டது. அதனால் அக்குடும்பங்கள் சொல்லொணா துயரங்களை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது.

எமது வறுமை நிலையைப் போக்குவதற்காக நாங்கள் அங்கு கடற்றொழிலையே நம்பி இருந்தோம். கடலுக்குச் சென்று தொழில் செய்ய முடிந்தது. ஆனால் பிடிக்கப்பட்ட மீனுக்கு சந்தை வாய்ப்பு கிட்டவில்லை. கிலோ 10 ரூபா வீதமே மீன் வகைகளை எம்மிடம் கொள்வனவு செய்தனர்.

நாம் கஷ்டப்பட்டுப் பிடித்த மீன்வகைகளைச் சந்தைப்படுத்த முடியாததால் அவை கருவாடாக்கப்பட்டன. கருவாடும் விற்பனையின்றி தேங்கிக்கிடக்கிறது. அரிசியே கிடைக்காத நிலையில் மீனை யார் வாங்குவார்கள்?

மீன் ஒரு கிலோ 10 ரூபாவாக விற்பனையான அதே வேளை தேங்காய் ஒன்று 50 ரூபாவுக்கு மேல் விற்பனையானது.

சிறிய கொட்டில்களில் வசித்து வந்த நாம் கடும் பனியாலும் வெயிலாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டோம். அதைவிட நுளம்பின் தாக்கமே மிக மோசம்.

நோய்கள் இலகுவில் பரவின. இரண்டு நாள் காய்ச்சலினால் எம்மத்தியில் பல பேர் உயிரிழந்தனர்.

சிகிச்சை பெறுவதாயின் மல்லாவி ஆஸ்பத்திரிக்கே செல்ல வேண்டும் ஆனால் அங்கும் மருத்துவ வசதி இல்லை என்றே கூறுகிறார்கள். இதனால் சகல நோய்களுக்கும் பனடோலே மருந்தாக எமக்கு கிடைத்தது.

மிகவும் கஷ்டங்களை அனுபவித்த நாம் என்ன நடந்தாலும் பரவாயில்லை குடாக்கடல் ஊடாக சொந்த இடத்துக்கு சென்று விடுவது என்று தீர்மானித்தோம்.

எமது மீன்பிடி உபகரணங்கள் மற்றும் பொருள்களைமூட்டையாகக்கட்டிக் கொண்டு கடந்த 9 ஆம் திகதி காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டோம்.

18 வள்ளங்களிலும் இரு 'பிளாஸ்ரிக்' படகுகளிலும் பாலாவிக்கரையில் இருந்து புறப்பட்ட நாம் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் கல்முனையை அண்டிய மண்ணித்தலையை வந்தடைந்தோம்.

விடிந்ததும் தொழிலுக்காக அங்கு வந்த மீனவர்கள் எங்களைச் சந்தித்தனர். வெள்ளைக் கொடிகளுடன் குருநகர் செல்லுங்கள்; பிரச்சனை ஒன்றும் இல்லை என்று அவர்கள் எம்மிடம் சொன்னார்கள். பின்னர் நாங்கள் அங்கிருந்து குருநகரை வந்தடைந்தோம் — என்றார். (ஐ-51)

## விளையாட்டுப் போட்டிகள்

கொழும்புத்துறை, மார்ச்13

கோண்டாவில் இந்துமகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டிகள் நாளை முற்பகல் 9 மணி முதல் அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் கலந்து கொள்வார். (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
THE JAFFNA EDUCATION CENTRE
( சாந்தி சினிமா முன்பாக )
**ஆண்டு 6 - 10, O/L**

- Spoken English With Grammar
- சிங்களம்
- Shorthand Typing

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 15 - 03 - 97

(45751) - நிர்வாகி


உ
சிவமயம்
அமரத்துவ மெய்திய

## திருமதி அன்னம்மா முத்துவேலு

அவர்கள்

தோற்றம்: 12—12—1938 மறைவு: 12—02—1997

ஆத்ம சாந்திக்கான

## அந்தியேஷ்டி நாள் (14-03-1997)

## இதய அஞ்சலி

சைவ, கலை, பண்பாட்டு எழுச்சிக்காய்த்
தன்னை அர்ப்பணி பேரவைதாம்
செய்பணி கட்குத் துணையாம்நின் துணைவனார்
செய்தொண்டு உங்களைக் கதிசேர்க்க
நன்னிய மத்துடன் விரத அனுட்டானம்
நயந்து நின்றநின் ஆன்மாதாம்
சந்நிதி வேலவன் பாதத் தாமரை
சார்தற்கு எங்களின் பிரார்த்தனைகள்.

உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

**சந்நிதியான் ஆச்சிரம,**
**சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை.**

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.
14-03-1997 (சி/285)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்: 05-01-1969

ஆண்டவன் அடியில்: 11-02-1997

## செல்வி உதயா மகாலிங்கம்

வாச மலராய் மணந்து மனம் பரப்பும் வேளையிது!
நீயேன் வீட்டை மறந்து விட்டு,
எங்கள் கனவுகளை எரித்து விட்டுப்போய் விட்டாய்?
'இரக்கமே இல்லாத இதயத்தின் வால்வுகளால்'
''உதயா'' உனைத் தொலைத்தோம்!
உருகி நிதம் கண்ணீரில் கரைகின்றோம்!
உனை மீண்டும் காணத் துடிக்கின்றோம்.

எமது மகளின் வீட்டுக்கிருத்தியம் இன்று(13-03-97) வியாழக்கிழமை மு.ப. 10-30 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து இன்னருள் வேண்டி, மதியபோசன உபசாரத்திலும் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மகளின் பிரிவின்போது எமக்கு ஆறுதல் அளித்தும், மலர் வளையம், மலர்மாலை சாத்தியும் உதவிகள் பல புரிந்த அன்பர்களுக்கும், ''சமூக அபிவிருத்தி மன்றத்தாருக்கும்'' எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்:

**தந்தை, தாய், சகோதரன்,**
**உற்றார், உறவினர், நண்பர்கள்.**

11/15 செம்மணி றோட்,
நல்லூர். (45752)

## சிங்கப்பூர் மலேசிய ஒய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறு பவர்களது பெப்ரவரி மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் இவற்றை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100

## சமய சந்திகளில்

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தின் பெருவிழா ஆயத்த வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிறது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பெருவிழா நடைபெறும். அன்றைய தினம் காலை 7 மணிக்கு பெருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியும் இடம் பெறும்.

★ ★ ★

பருத்தித்துறை கற்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த உற்சவ நிறைவு இன்று காலை 6.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

(ஐ-51)

★ ★ ★

கொய்யாத் தோட்டம் ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் இடம்பெறும். பங்குனி உத்தர தினமான எதிர்வரும் 23 ஆம் திகதி உற்சவம் நிறைவுபெறும்.

(ஐ-30)

★ ★ ★

அல்வாய் வடக்கு வியாபாரி மூலை பத்திரகாளி சமேதஸ்ரீ ஆதிசிவ வீரபத்திர சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

(ஐ-173)

## தவக்காலச் சிந்தனை

( 30ஆம் நாள்- வியாழன்)

துன்பத்தை அனுபவித்தவனுக்குத்தானே இன்பத்தின் சுவை புரியும். அதுபோல் ஒருவர் இறந்தால்தானே உயிர்க்கமுடியும். எதனையும் சுவையாக கூறுவதை விடதன் அனுபவத்தில் கண்டுணர்வதற்கு நம்பிக்கையுடன் முயற்சியும் அவசியமாகிறது. ''கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது' என மிக அழகாக சொல்லுகிறார் கிறிஸ்து. எமது மனங்கள் அனுபவித்த துயரை இன்று மீட்டுப் பார்க்கும் போது தான் இன்றுள்ள நிலையின் மேன்மையை உணர முடியும். அவற்றை வெறும் அனுபவங்களாக மட்டும் கொள்ளாது வாழ்வின் மன மாற்றத்திற்கு வித்திட்டு புடமிட்ட காலமாக எண்ணி இத்தனை செய்கையிலும் இறை அருள் இருப்பதை உணர்ந்து சிந்திக்கத்தூண்டும் காலமே இத்தவக்காலம் இது குறித்து ... 

யோசப் பால

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் முன்னாள் தலைவர்
**கா. பிரகலாதன்** அவர்களின்
அன்புத் தந்தையார்

**வீ. பொ. கார்த்திகேசு**

அவர்களின் மறைவையொட்டி அவர் தம் குடும்பத்தாருக்கு இந்நாளில் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

**சிறீதாஸ் - றிக்கிறேசியன்**
**விளையாட்டுக் கழகம்**
**சாவகச்சேரி.**

(சி/273)

## 31ஆம் நாள் நினைவலையில்



தோற்றம்: 12 — 04 — 1951

மறைவு: 11 — 02 — 1997

## திருமதி ஜெகதீஸ்வரி சிவதாசன்

(குரும்பசிட்டி)

அறுசுவை உணவு தந்தாய்
அன்பொடு பரிவு தந்தாய்
உறுதுணையாக நின்றெம்
உளமதில் பூத்து நின்றாய்
மறுமையில் சென்று நீயும்
மாதமொன் றாகுதம்மா
வெறுமையில் எங்களுள்ளம்
வெதும்பியே வாடுதம்மா
நறுமண மலரே யெங்கள்
நற்குல விளக்கே நீயும்
பெறுமரும் பேறுபெற்றே
நற்கதி யடையவேண்டி
நாள் தொறும் நாவில் நெஞ்சில்
நம்கரமதனிலெல்லாம்
நறுமலர் தாங்கித்தூவிப்
பணிகின்றோம் நம்பிரானை.

அன்புக்கணவன் **திரு. க. சிவதாசன்**
பிள்ளைகள் **சி. தர்சன், சி. சேந்தன்**
**மற்றும் குரும்பத்தினர்.**

68, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (45759)

யாழ்ப்பாணம், நீராவியடி
அருள்மிகு
**தோப்பு**

## மாணிக்கப்பிள்ளையார் கோயில்

## வருடாந்த சாந்தீக மகோற்சவம்

| | |
|---|---|
| 13 03-97 | வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணி: கொடியேற்றம் |
| 19-03-97 | புதன்கிழமை பிற்பகல் 2-00 மணி: வேட்டைத்திருவிழா |
| 20 03-97 | வியாழக்கிழமை மாலை 5-00 மணி: புதிய சப்பரத் திருவிழா |
| 21-03-97 | வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி: தேர்த்திருவிழா |
| 22-03-97 | சனிக்கிழமை காலை 10-00 மணி: தீர்த்தத் திருவிழா |
| ,, | சனிக்கிழமை மாலை 5-00 மணி: கொடியிறக்கம் |
| 23-03-97 | ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி: ஸகஸ்ர (1008) சங்காபிஷேகமும், 9-00 மணிக்கு மஹாகணபதி ஹோமமும் நடைபெறும். |

12-00 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 3-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும், திருவூஞ்சலும் நடைபெற்று எம்பெருமான் கிராமப் பிரதட்சணம் வலம் வருவார்.

24-03-94 திங்கட்கிழமை மாலை 5-00 மணி: வைரவர் சாந்தி இடம்பெறும்.

விழாப் பிரதம குரு:

''சிவாகம சிவஞான கிரியா குருமணி''
**சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்''**
(தேவஸ்தான பிரதம குரு)

ஆலய தர்மகர்த்தா
**திருமதி நவமணி செல்வராஜா**

(9382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நூலகம்.

# நாட்டில் ஆழமாக வேரூன்றிவிட்ட ஆயுதக் கலாசாரம்

# துப்பாக்கிகளைப் பறிப்பதன் மூலம் முடிவுக்கு வந்து விடாது

**வை**த்தியம் நன்குதலைக்கேறிய பின்னர் வைத்தியத்துக்காக அலைவது போலவே சந்திரிகா அரசாங்கத்தின் ஆயுதக்களையெடுப்பு நடவடிக்கை விளங்குகின்றது

நாட்டில் இன்று ஆயுதக் கலாசாரம் நன்குவிரிவடைந்துள்ளது. அரசியல் புள்ளிகள் முதற்கொண்டு ஏறத்தாழ முக்கிய புள்ளிகள் அனைவருமே ஆயுதபாணிகளாக வலம் வருகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்தகால ஆட்சியில் ஒரு கொலைகார யுகமே நிலவியதென இன்றைய பொது மக்கள் ஐக்கிய முன்னணியினர் தெரிவித்து வருகின்றனர்.

கொலை செய்யப்பட்டோர், கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின்றி வைக்கப்பட்டோர், காணாமல் போனோர் என்று நீண்டபட்டியல்கள் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமிருந்து வெளிவந்தன. இப்பட்டியல்கள் வெளிவர ஆயுதக் கலாசாரமே காரணமாகவிருந்தது.

ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தற்போது இரு வருடங்களை ஆட்சி செய்து முடித்து விட்டுள்ளது. ஆயினும் கொலை செய்யப்படுவோர், காணாமல் போவோரின் பட்டியல் தற்போது கூட வெளிவருவதையே அவதானிக்க முடிகின்றது

வடக்கே ''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து அங்கே நூற்றுக் கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர சூட்டுச் சம்பவங்கள், கொலைச் சம்பவங்கள் என்று நாட்டில் ஆங்காங்கே வன்முறைகள் மலிந்து போயுள்ளன.

எனவே இலங்கையில் ஆயுதக் கலாசாரமென்பது நன்கு ஆழமாக வேரோடியிருக்கின்றது. அதனை முழுமையாக சந்திரிகா அரசினால் வேரறுக்க முடியுமா? என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

ஆயுதக்களையெடுப்பென்றுஅரசு அறிவித்ததுமே அரசியல் கட்சிகள் பல, தமது பாதுகாப்புப் பற்றிக் குறிப்பிடலாயின. ஆயுதமின்றி ஒரு பாதுகாப்பான சூழ்நிலையில் தம்மால் இருக்க முடியாது என்பதனையும் அந்த அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியும் இருந்தன.

இலங்கையின் வடக்கு — கிழக்கில் யுத்தம் நீடித்துச் சென்று கொண்டிருக்கின்றது. அரசபடைகளும், விடுதலைப் புலிகள் அமைப்பும் விதவிதமான ஆயுதங்கள், வெடிபொருள்களுடன் யுத்தத்தில் குதித்துள்ளன.

இலங்கையிலிருந்து வெளிவரும் நாளிதழ்களைப் புரட்டும் போது ஆயுதப் படையின் ஆட்சேர்ப்புக்காக பாரிய விளம்பரங்கள் காணப்படுகின்றன.

இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மை என்ற பிரச்சினைக்கு தீர்வைக் கொடுப்பதாக இராணுவ ஆட்சேர்ப்பு இருக்கின்றது.

இராணுவத்தில் ஆயிரமாயிரம் இளைஞர்கள் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெறுகின்றனர். இதன் மூலம் நாடளாவிய ரீதியில் ஆயுதங்களின் பயன்பாடு, அவற்றின் தன்மைகள், அவற்றைக் கையாளும் விதம் என்பவற்றில் ஏறத்தாழ அனைத்து இளைஞர்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பரிச்சயமாகியிருப்பதையே அறிய முடிகின்றது.

இது தவிர நாட்டில் இடம் பெறும் கொள்ளை, கொலைகள் என்பவற்றின் பின்னணியில் ஆயுதப்படைகளிலிருந்து தப்பி வந்தோரும் பரவலாக ஈடுபட்டுள்ளதையும் காண முடிகின்றது.

இவை அனைத்தையும் விரிவாக ஆராயும் போது, வன்முறைகளோடு கூடிய வாழ்க்கை முறையையே ஆயுதக் கலாசாரம் இலங்கையில் உண்டு பண்ணியிருப்பதைக் காண முடிகின்றது.

ஆயுதங்களை வீடு வீடாகத் தேடிக் கண்டு பிடிப்பதன் மூலமும், அரசியல்வாதிகளிடமிருந்து உருவி எடுப்பதன் மூலமும் ஆயுதக் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்துவிட முடியாது.

அரசியல் நடவடிக்கைகளில் எப்போது வன்முறைகளற்ற சிந்தனை வெளிப்படுகின்றதோ, ஆட்சியதிகாரங்களிலிருப்போர் முற்று முழுதான ஜனநாயக அரசியலில் எப்போது நம்பிக்கை வைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றைக் காண முன்வருகிறார்களோ, அப்போது தான் ஆயுதக் கலாசாரமென்பது இலங்கையில் முற்றுப் பெறும்.

பழைய மொந்தையிலிருந்த கள்ளு புதிய மொந்தையில் வார்க்கப்பட்டிருப்பது போலவே கடந்த ஐ. தே. க. ஆட்சியில் நிலவிய ஆயுதக் கலாசாரம், தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் பரவியுள்ளது.

### சமாதானம் எட்டாக்கனி

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்களில் குதித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா, வடக்கு — கிழக்கில் விரைவில் அமைதி ஏற்படுத்தப்படும் என்ற கோஷத்தை முன்வைத்துள்ளார். ஜனாதிபதி சந்திரிகா தமது முன்னைய தேர்தல் பிரசாரங்களின் போதும் வடக்கு — கிழக்கு பிரச்சினை தீர்க்கப்படும்; சமாதானம் கொண்டுவரப்படும் என்றெல்லாம் கூறியிருந்தார்.

ஆனால் சந்திரிகா அரசு பதவிக்குவந்த கடந்த இரு வருடகாலங்களில் அமைதி, சமாதானம் என்பவை எட்டாக் கனிகளாக இருப்பதையே காணமுடிகின்றது. தலைநகர் முதற்கொண்டு நாட்டின் அனைத்துப் புறத்திலும் யுத்தப் பீதியின் தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது.

### தலைநகர வீதிகளில்கூட அரண்கள்

தலைநகர் [illegible] அகலமான முக்கிய பாதைகள்கூட இரும்புத்தடுப்புகளாலும், மணல் மூடைகளாலும் அரண் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இது தவிர நாட்டில் திரும்பும் இடமெல்லாம் ஆயுதமேந்திய படையினரும், சோதனைச் சாவடிகளுமாக இருக்கின்றன.

இந் நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிடும் அமைதி, சமாதானம் என்பவை 'மந்திரத்தால் மாங்காய் விழுத்தும்' கதையாகவே உள்ளன.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முழுமையாக எட்டுவதற்கு ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிகளுக்குமிடையே ஒருமித்த கருத்து நிலவவேண்டும்.

ஆனால் அண்மைக்காலச் சம்பவங்களால் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையேயான முரண்பாடுகளில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இவ்விரிசலை நிவர்த்தி செய்வதில் இருதரப்பினரும் எவ்வளவு தூரம் உடன்பாடொன்றுக்கு வருவார்கள் என்பது முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

மறுபுறத்தே வடக்கு — கிழக்கில் ஆயுதப்போராட்ட சக்தியான விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்ச்சியாக மோதல்களையே கொண்டிருக்கின்ற நிலையில், அந்த அமைப்பு அரசியல் நீரோட்டத்தில் குதிக்குமா என்பதுவும் சந்தேகமாகவே இருக்கின்றது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவின் உடன்பாட்டைப் பெற வேண்டிய அதேசமயம் வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் அமைப்புடனும் அரசியல் அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த இரு விடயங்களிலும் பொ. ம. ஐ. மு. அரசு வெற்றி காணும் பட்சத்திலேயே தீர்வு என்பதும் கைகூடும்.

தேர்தல் கால பிரசாரங்களும், அப் பிரசாரங்களின் போது வெளியாகும் வாக்குறுதிகளும் வெறுமனே வாக்கு வேட்டையைக் குறி வைத்தவையாகும்.

### அச்சம் அற்ற அரசியல்

ஆனால் அச்சமோ, அவலமோ அற்ற உறுதியான அரசியலை நடத்துவதற்கு நேர்த்தியான, நேர்மையான அணுகுமுறைகளே தேவைப்படுகின்றன.

வார்த்தை ஜாலங்களாலும், பரஸ்பர கண்டனக் கணைகளாலும் தற்போதைய தேர்தல் பிரசாரங்களை கட்டியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் எந்தவொரு கட்சியும் உள்ளூர் நிர்வாகங்களைக் கைப்பற்றலாம். ஆனால் நாட்டில் எந்தவொரு நிர்வாகமும் நேர்த்தியாக நடைபெறுவதற்கு முக்கிய அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

எனவே ஏற்கனவே பல்வேறு காரணங்களினாலும் பின் தள்ளப்பட்டுள்ள இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி, உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் எத்தகைய வடிவத்தில் இருக்குமென்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

இனப்பிரச்சினை என்பது வெறுமனே அரசியல் சார்ந்ததாக மட்டும் காணப்படவில்லை. பொருளாதாரம், மற்றும் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றுக்கும் அடிகோலியதாகவே இனப்பிரச்சினை விளங்குகின்றது.

வடக்கு — கிழக்கில் நிலவி வரும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் சொல்லொணாத் துயரக் கதைகளைக் கொண்டுள்ளன.

புலம்பெயரும் போது ஆபத்துக்களில் சிக்கி உயிர்துறக்கும் நிலை ஏற்படுகிறது. அத்துடன் அகதிமுகாம்களில் உரியவற்றைப் பெறமுடியாது தவிக்கவேண்டியுள்ளது.

எனவே இலங்கையின் இனப்பிரச்சினை என்பது வெறுமனே அரசியல் சார்ந்தது மட்டுமல்ல.

அது இந்த நாட்டின் எதிர்காலம் சார்ந்தது. ஒட்டு மொத்தமான பாதுகாப்பு சார்ந்தது அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள் சார்ந்தது.

இந் நிலையில் இவற்றை ஆட்சியாளர்கள் உணராத வரை இலங்கைக்கு விமோசனம் என்பது இல்லை என்றே குறிப்பிடமுடியும்.

(நன்றி: தினமுரசு)


## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் துரைசிங்கம் சரவணன்துரை

(முன்னாள் மாணவன், அச்சுவேலி ம. வி.)

மலர்வு: **27—04—1971** உதிர்வு: **13—03—1985**

ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும் மாறாது உன்நினைவு.
குறிஞ்சி மலராக மீண்டும் மலராயா?
ஆண்டவன் பாதத்தை அணைத்திட்டாய் சரவணா!

சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா, அம்மா, அம்மம்மா, உறவினர்கள்.

நாவற்காடு,
அச்சுவேலி தெற்கு. (45733)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 11 — 04 — 1931



உதிர்வு: 11 — 02 — 1997

### வீ. பொ. கார்த்திகேசு

(சட்டத்தரணி, J.P., U.M., சாவகச்சேரி)

அன்புத் தெய்வமே!

தாராத துயரத்தைத் தந்துவிட்டு
வாராத இடத்துக்குச் சென்று விட்டீர்கள்
ஆறைந்து நாள்கள் நகர்ந்தாலும்
ஆறிடுமோ தங்கள் நினைவுகள்!
நேற்றிருந்தவன் இன்றில்லை என்ற
நியதியை நிரூபித்தீர்களோ?
பாசத்தோடெம்மைப் பாங்காக வளர்த்தீர்
நேசமோடு எமை அரவணைத்து
வழிகாட்டினீர்! இனி எங்கு காண்போம்?

இறைஞ்சுகிறோம் தங்களாத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட.

மனைவி திருமதி கா. மகேஸ்வரி,
மக்கள் கா. பகீதரன்,
கா. இரவீந்திரன்,
கா. சுபேந்திரன்,
கா. பிரகலாதன்,
மைத்துனி திருமதி ம. நாகேஸ்வரி.

புகையிரத வீதி,
சாவகச்சேரி. (சி/287)

## மூதறிஞர் க. சி. கு. நூற்பதிப்புக்கழகம் 2-3-97இல்

### வடமராட்சிப் பாடசாலைகளிடையே நடத்திய

## திருக்குறள் போட்டி முடிவுகள்

**1. அதி கீழ்ப் பிரிவு:**

1ஆம் இடம் சி. ஜனனி யா/காசிநாதர் வித்தி.
2ஆம் இடம் செ. கிரிசாந் யா/ புற்றளை ம. வி.
3ஆம் இடம் த. றஜீதா யா/மாணிக்கவாசகர் வித்.
,, தே. லிண்டா மரீனா யா/ கட்டைவேலி மெ. மி. த. க. பா.

**2. கீழ்ப் பிரிவு:**

1ஆம் இடம் ந. கிருபாகரன் யா/வேதாரணியேஸ்வரர் வித்தி.
2ஆம் இடம் கு. ரகுறாம் ] யா/ மணியகாரன்
3ஆம் இடம் தி. திலீபன் ] தோட்ட த. வித்தி.

★ மத்திய பிரிவு மேற்பிரிவு முடிவுகள் உரிய பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விளம்பர அன்பளிப்பு:

இயற்கை நேசன் மா. கனகராசா

"சுதர்ஸனம்" ஐடியல் பேக் ஹவுஸ்] நெல்லியடி

[(சி/289]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் சகல வசதிகளுமுடைய வீடும், காணியும் மற்றும் Belling Auto-Timer, எலெக்றிக் குக்கர், மேசை/ Pedestal விசிறிகள், ஊஷா குளிர் சாதனப்பெட்டி, சோனி ரெலிவிஷன், ஜெனரேற்றர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல, 91/5 இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். (45735)

### தவறிவிட்டது

முருகேசு சறோஜினிதேவி இல. (668611907 V), முருகேசு இலட்சுமி ஆகியோரது தேசிய, விசேட அடையாள அட்டைகள் கோயில் வீதி, நல்லூர் — யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் குருநகர் மகப்பேற்று மருத்துவமனையில் ஒப்படைக்கவும். (45755)

### வேப்ப மரம்

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வேப்ப மரம் தறித்து தருவதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. விவரங்களை கல்லூரி அதிபரிடம் 21-03-97-க்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/286)

## ஆலய புனரமைப்பு

நீண்ட காலமாக மூடப்பட்டுக் கிடந்த நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கான கும்பாபிஷேகத்தை விரைவில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பம்

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் இடம்பெறும்.

தபால் மூல வாக்கு அட்டைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்தார். (ஐ)

## தென்னிந்திய திருச்சபை கிறிஸ்துவ இறையியல் கல்லூரி

### பொதுநிலையாளர் பயிற்சி மையம்

### Lay Training Institute

1993/94 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயிற்சி பெற்றவர்களுக்கான கருத்தரங்கும், தராதரப் பத்திரம் வழங்கலும் பேராயர் அதிவண. கலாநிதி **S. ஜெபநேசன்** அவர்கள் தலைமையில் நடைபெறும்.

**இடம்:** உடுவில் மகளிர் கல்லூரி

**காலம்:** 15-03-1997 சனிக்கிழமை
காலை 10 00 மணி (புதிய நேரம்)

பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

குறிப்பு: விரைவில் புதிய பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட உள்ளதால் புதிய பயிற்சியாளர்களுக்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கூட்டுநர்**
**பொதுநிலையாளர் பயிற்சி மையம்**

கிறிஸ்துவ இறையியல் கல்லூரி,
வட்டுக்கோட்டை. (சி/284)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 14 — 04 — 1928

உதிர்வு: 23 — 02 — 1996

### அமரர் திரு. க. தாமோதரம்பிள்ளை

(நெடுந்தீவு கிழக்கு - 12, நெடுந்தீவு.)


திதி: **13—03—1997**

காலம் உருண்டோடி ஆண்டும் ஒன்றாச்சே
கருணை முகமிங்கு காணாக் கனவாச்சே
வாழும் நிலை தந்து வழிகாட்டி வைத்தவரை
பாழும் விதி வந்து பாதியிலே பறித்ததுமேன்?
பாசச் சிறகில் வைத்துப் பக்குவமாய் பேணி எம்மேல்
நேசம் பொழிந்த அந்த நினைவதனை நாம்
மறவோம்
ஈசன் திருவடியில் இளைப்பாறி அமைதி கொள்வீர்
எங்கள் இதயங்களில் என்றும் வாழ்ந்திடுவீர்!

**மனைவி, மக்கள்,**
**பெறாமக்கள், மருமக்கள், பேரர்**
**சகோதரர், மைத்துனி, உறவினர்கள்.**

12-ம் வட்டாரம்,
நெடுந்தீவு கிழக்கு,
நெடுந்தீவு. (சி/283)

## சிவ மோட்ச தீபம்



தோற்றம்: 11 — 02 — 1920

மறைவு: 10 — 02 — 1997

### சிவஸ்ரீ சின்னையா முருகேசுஐயர்

அளவெட்டியை பிறப்பிடமாகவும், மடத்தடி, சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சிவஸ்ரீ சின்னையா முருகேசுஐயர் அவர்கள் கிளிநொச்சியில் 10 - 02 - 97 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் மகேஸ்வரிஅம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஸ்ரீ சின்னையாக் குருக்கள் தம்பதிகளின் புத்திரரும், காலஞ்சென்ற செல்லத்துரைஐயர், கனகசபைஐயர், முத்தம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(45753)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் இளையவி கந்தையா

(சின்னக் கந்தையா)

மலர்வு: **31—08—1926**

உதிர்வு: **11—02—1997**

அங்கையா லானமட்டும் அள்ளிச் சொரிந்திட்டு
செங்கை சிவக்கச் சிரித்து நின்ற — சங்கைமிகு
நம்பியாய் வாழ்ந்து நானிலத்தில் சிறப்புற்ற
தம்பிகந் தையா இவன்.

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் இருந்த எமது குலவிளக்கு அணைந்து விட்டது. அன்னாரது இழப்பு எமது குடும்பத்துக்கு பேரிழப்பாகும். மேதினியில் எம்மை எல்லாம் ஆளாக்கி வாழவைத்த தெய்வத்தை நினைவு கூர்ந்து இன்று (13 - 03 - 97) வியாழன் காலை 10 மணிக்கு சாத்தாவத்தை மானிப்பாயில் உள்ள எமது இல்லத்தில் கிரியா பூசைகளும், ஆத்ம சாந்தி அஞ்சலியும் நடைபெறும். தொடர்ந்து 12 மணியளவில் மதிய போசன உபசாரமும் இடம்பெறும்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி,
மானிப்பாய். (45744)

உ

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருடம் பங்குனி 2ஆம் திகதி (15-03-1997) சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரம் காலை 8-24 மணி தொடக்கம் 9-00 மணி வரையுள்ள சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புதல்வி

### ★ செல்வி வைஹரி ★

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு ருது சாந்தி செய்ய பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பித்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
**திரு. இ. சிவபாதம்**
(முன்னாள் இ. போ. ச. பருத்தித்துறை)
(ஜேர்மனி)

''திருத்தணிகை''
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (45745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## விரைந்து செயற்படுக

வன்னிப் பகுதிக்குக் கடந்த முப்பத்தெட்டு நாள்களுக்கு மேலாக வவுனியாவிலிருந்து உணவுப் பொருள்கள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை. அதனால் நிவாரண உணவு பெற்று வந்த சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குகிறார்கள்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மற்றும் வவுனியா வடக்குப் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களுக்கே இந்த ஆபத்து வந்துள்ளது. உணவு இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே, அதிக எண்ணிக்கையான மக்கள் உள்ளனர்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லை நடராஜா தெரிவித்த புள்ளி விவரங்களின் பிரகாரம், அந்த மாவட்டத்தில் நிவாரணமாக உணவுப் பொருள்களைப் பெறுவோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ஆகும்.

ஆனால் நிவாரணம் எதுவுமின்றி உழைப்புமின்றி, தொழிலுமின்றி, வருமானம் இன்றி வாழ்க்கையின் விளிம்புக்கு வந்துள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து முப்பதாயிரம் ஆகும்.

இதுபோலவே ஏனைய இரண்டு இடங்களிலும் நிவாரணம் உள்ளவர்களும், நிவாரணம் இல்லாதவர்களுமாக இருவகை மக்கள் உணவின்றி வாடுகிறார்கள்.

வடக்கு வாழ் மக்கள் உணவில்லா நிலையை எதிர்நோக்குவது இதுதான் முதலாவது முறை என்பதல்ல. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த போது கொண்டு வந்த, பொருளாதாரத் தடைக்குப் பின்னர் இப்பகுதி வாழ் மக்களுக்கு உணவுப் பற்றாக் குறையும், பட்டினி கிடக்கும் நிலையும் அடிக்கடி வந்து வாட்டுகிறது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழ்பவர்கள் என்பதாற் போலும், தமிழர்களின் உணவுத் தேவை கூடப் புறக்கணிக்கப்படுகிறது,

போர்க் காலத்திலும் மக்களின் அத்தியாவசிய சேவைகளைப் பூர்த்தி செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். அரசு அவ்வாறு செய்யத் தவறின் சம்பந்தப்பட்ட மக்களை அரசு தனது பிரசைகளாகக் கருதவில்லை என்ற நிலையே வெளிப்படும்.

போர் நடைபெறும் பகுதிகளில், போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி வாழ் மக்களுக்கும் நிவாரணம் வழங்கும் ஒரே நாடு இலங்கை தான் என்று ஜனாதிபதி அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருந்தார்; புள்ளி விவரங்களுடன்.

அப்படியிருக்க, வன்னிப் பகுதிக்கு 38 நாள்களாக உணவுப் பொருள்கள் அனுப்பாமல் மக்களைப் பட்டினி போடுவது எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல.

அரசியலில் சொல்வது ஒன்று செய்வது வேறொன்றாக இருப்பது தான் மரபாகி விட்டது. ஆனால் மக்களின் உணவு விடயத்தில் அந்த வழமையை முற்றாகக் கைவிட்டுவிட வேண்டும். அரசு இது விடயத்தில் விரைந்து செயற்படுமா?

# மட்டு. சிறையில் மூன்று கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 13

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் உள்ள மூன்று அரசியல் கைதிகள் கடந்த திங்கட்கிழமை முதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தாம் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரியே இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

வி. உதயராஜ், எம். கே. குலன், ரி. பாலகிருஷ்ணன் ஆகிய மூன்று கைதிகளுமே உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இவர்களை விடுதலை செய்யவேண்டும், இல்லையேல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட எம்.பி திரு. யோசப் பரராஜசிங்கம் கோரிக்கை விடுத்தார்.

(ஐ)

## சுவரொட்டியை மாடு தின்ன கட்சிகள் கோஷ்டி மோதல்!

கொழும்பு, மார்ச் 13

தெற்கில் நடக்கும் சுவரொட்டிப் போர் மாடுகளால் மேலும் உக்கிரம் அடைகிறது.

இவ்வாறான சம்பவம் ஒன்று கடுகண்ணாவையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சம்பவதினம் கண்டியில் இருந்து கொழும்பை நோக்கி முன்னாள் ஐ. தே. க அமைச்சர் ஒருவர் காரில் வந்து கொண்டிருந்தார்.

அவர் கடுகண்ணாவையை அடைந்தபோது, அங்கு ஒட்டப்பட்ட சுவரொட்டியில் பசைகாய முன்னர் மாடுகள் அவற்றைத் தின்று கொண்டு இருந்ததைக் கண்டாராம்.

மறுநாள் அந்த முன்னாள் அமைச்சர் கொழும்பில் இருந்து கடுகண்ணாவைப் பொலீஸாருடன் தொடர்பு கொண்டபோது, சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டதால் ஐ தே. க — அரச தரப்பு ஆதரவாளர்களிடையே முதல் நாள் இரவு மோதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

அச்சமயம், தாம் கடந்த இரவு கண்ட காட்சியை பொலீஸாரிடம் அந்த முன்னாள் அமைச்சர் தெரிவித்தாராம்.

(இ-3-150)

## தேர்தல் களத்தில் முதல் முஸ்லிம் யுவதி

கொழும்பு, மார்ச் 13

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் செல்வி பைசல் இராயா நஸ்ரீதீன் என்னும் 27 வயது முஸ்லிம் யுவதி ஒருவர் போட்டியிடுகிறார்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு முஸ்லிம் பெண்வேட்பாளர் பங்குபற்றுவது இதுவே முதல் முறையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுவதியின் தாயும் சகோதரரும் கடந்த 1994 ஆம் ஆண்டு ஒக்டோபரில் காமினி திசாநாயக்கா கொல்லப்பட்ட குண்டு வெடிப்பில் பலியாகினர்.

இவரது குடும்பம் ஐ. தே. க ஆதரவுடையதாக இருந்து வந்துள்ள போதிலும் தினேஷ் குணவர்த்தனா தான் சிறந்த தலைவர் என்பதை ஏற்றுள்ள இவர் அவரது கட்சியில் இணைந்து போட்டியிடுகிறார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

(ஐ-3)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## நீர் விநியோகத்தைச் சீராக்க புதிய நீரிறைக்கும் இயந்திரம்

யாழ்ப்பாணம் மார்ச் 13

யாழ். ஆஸ்பத்திரியில் நீர் விநியோகத்தைச் சீராகவழங்கும் பொருட்டு கொழும்பில் இருந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான டீஸலில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று எடுத்துவரப்பட்டுள்ளது.

வடபிராந்திய கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் என் தேவராஜன் இந்த நீரிறைக்கும் இயந்திரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

ஆஸ்பத்திரியில் தற்போது இயங்காத நிலையில் உள்ள நீரிறைக்கும் இயந்திரங்களைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-15)

## ஐ.நா. தூதரக நிதி உதவியுடன் பருத்தித்துறையில் புனரமைப்பு

வடமராட்சி, மார்ச் 13

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கிய 10 இலட்சம் ரூபா நிதியில் இருந்து பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் பல்வேறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மந்திகைச் சந்தை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அங்கு நான்கு நீரடைப்பு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தையின் முன்பக்க மதில்கள் கட்டப்பட்டுள்ளன. புதிதாக இரண்டு கடைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

புலோலி மேற்குப் பகுதியில் விவசாய நிலங்களுக்குள் வெள்ளம் புகுவதைத் தடுப்பதற்காக ஆனை விழுந்தான் வெள்ளை வாய்க்கால் திருத்தப்பட்டு சிமெந்து அணை கட்டப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் புனரமைப்புப் பணிகளை தூதரக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (ஐ-173)

### நாளை

**பங்குனி 1**

வெள்ளிக்கிழமை

திதி: ஷஷ்டி முன்இரவு 10-37 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை மாலை 6.14 வரை.

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 6.22-7.52

இராகுகாலம்: 10.52-12.22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள் 10 ஆம் திகதி மூடப்படும்

கொழும்பு மார்ச் 13

தமிழ்—சிங்கள புத்தாண்டுக்காக அரசாங்கப் பாடசாலைகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி மூடப்படவுள்ளன, பாடசாலைகள் 11 ஆம் திகதியே மூடப்படுமென முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ-4)

### யாழ். ஆஸ்பத்திரி

## சிற்றூழியர்களில் பலர் நேற்று மதிய உணவு உட்கொள்ளவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த சிற்றூழியர்களில் பலர் நேற்றுத் தமது மதிய உணவை உட்கொள்ள முடியாமல் சமையற் பகுதியிலிருந்து திரும்பிச் சென்றனர்.

அடிக்கடி இத்தகைய சுகாதாரச் சீர்கேடுகள் நடைபெறுவது குறித்து சிற்றூழியர் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுகிறது. பிரேத அறைக்குக் கிட்டிய தூரத்தில் சமையல் பகுதி இருப்பதால் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

நேற்றைய சம்பவம் இது தான்:

பிரேத அறையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறி, மதிய உணவு வழங்கும்வேளையில், சாவகச்சேரிப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட அழுகிய சடலம் வைக்கப்பட்ட வண்டி சமையலறை வாசற் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் சமையலறைப் பகுதியில் துர்நாற்றம் கடுமையாக வீசியது.

இதனால் பல சிற்றூழியர்கள் உணவை எடுக்கவோ, சாப்பிடவோ முடியாமல் வயிற்றைக் குமட்டி, ஓங்காளித்தவாறு சமையலறையில் இருந்து திரும்பிச் சென்றதைக் காணமுடிந்தது.

(அ)

## குருமார்களுக்கு உதவி

குருநகர், மார்ச் 13

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தின் இடர்கால உதவி வழங்கல் திட்டத்தின் கீழ் குரும்பசிட்டியில் மிகவும் வறிய நிலையில் உள்ள மூன்று சைவக் குருமார்களுக்கு விசேட உதவுத்தொகை வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-51)

## அதிகரித்த ஒய்வூதியம் நிலுவையுடன்

கொழும்பு மார்ச் 13

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல்படும் வகையில் ஒய்வூதியம் பெறுவோருக்கு இம்மாதம் முதல் ஐந்து சதவீத அதிகரிப்புடன் ஒய்வூதியம் வழங்கப்படுமென ஒய்வூதியப் பணிப்பாளர் திருமதி பி எம். பி. ஜயவர்த்தன தெரிவித்தார்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம்வழங்கிய பத்து சதவீதமான ஒய்வூதிய அதிகரிப்பு இரு கட்டங்களில் அமுல் செய்யப்படுகின்றது. இரண்டாம் கட்ட அதிகரிப்பு1998ஜனவரி முதல் அமுலுக்கு வரும்.

(இ-4)

## விமான நிலைய ஊழியர்கைது

கொழும்பு, மார்ச் 13

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து தங்கச்சங்கிலிகளைக் கடத்த முயன்ற எயர்லங்கா விமானச் சேவை ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்கச் சங்கிலிகள் பல, பல கோடி ரூபாய் பெறுமதிவாய்ந்தவை என்று மதிப்பிடப்பட்டுள்ளன.

எந்த விமானச்சேவையில் இக் கடத்தல் இடம்பெற்றதென்பதை அறிவதில் சுங்க அதிகாரிகள் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

(ஐ-5)

## வாழைச்சேனைப் பகுதியில் மோதல்

கொழும்பு, மார்ச் 13

வாழைச்சேனை இறங்குதுறைப் பகுதியில் அமைந்துள்ள இராணுவப் பிரிவின் மீது நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் பல விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

## நிவாரணம்

நவாலி, மார்ச் 13

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலம் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இம்முறை நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி, சீனி, பருப்பு, லக்ஸ்பிறே என்பனவற்றுடன் சவரின் பார் சோப்பும் வழங்கப்படுகின்றது.

(இ-100)

## ஓடிக்கொண்டிருந்த டிராக்டரின் பெட்டி கவிழ்ந்து மூவர் காயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

ஓடிக்கொண்டிருந்த டிராக்டரின் பெட்டி கவிழ்ந்ததால், பெட்டியில் இருந்து தவறி விழுந்து மூவர் காயமடைந்தனர்.

நல்லூர் பகுதியில் உள்ள வீதி ஒன்றில் நேற்றுக்காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்தவர்களான பரமநாதன் ரகுநாதன் (வயது 39) ஆறுமுகம் குணரத்தினம் (வயது 30) கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அருமைநாயகம் குமாரதாஸன் (வயது 23) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

இந்த டிராக்டர் யாழ். மாநகர சபைக்கு சொந்தமானது. விழுந்தவர்கள் மாநகர சபையின் சிற்றூழியர்களாவர்.

காயமடைந்தவர்களில் குணரத்தினம் என்பவர் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். ஏனைய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-15)

# பாராட்டுகிறோம்

மூன்று அணிகளும் முதலிடம் பெற்றன

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டிகளில்,

**உடுவில் மகளிர் கல்லூரியினர்**

பங்குபற்றிய மூன்று அணிகளிலும் முதலிடங்களைப் பெற்றுள்ளனர். இவர்களின் திறமைகளைப் பாராட்டுவதோடு தொடரும் வலய, மாவட்டப் போட்டிகளிலும் முன்னணியில் திகழ வாழ்த்துகிறோம்.

**பழைய மாணவர்கள்,**
**பெற்றோர்.**

(சி/296)



## தொண்டர் ஆசிரியர் சங்கம்
### யாழ் மாவட்டம்
# அவசர அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் இதுவரை பதிவு செய்யாத அனைத்து ஆசிரியர்களும் தமது கடமையை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் 145/5 நாவலர் றோட், யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் அருகாமை) என்னும் முகவரிக்கு வெள்ளி (14- 03- 97) காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தவறாது சமுகம் தரவும். நிர்வாக உறுப்பினர்களும் வருகை தரவும்.

- செயலாளர்

தொண்டர் ஆசிரியர் சங்கம்,
யாழ் மாவட்டம்.

(C/292)



# 33 ஆம் நாள் நினைவஞ்சலி

## நாகநாதி இளையதம்பி

**(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)**

தோற்றம்: **08 - 03 - 1929** மறைவு: **10 - 02 - 1997**

எங்கள் பாசமிக்க அன்புத் தந்தையே!
எமது அன்புப் பிதாவே!
எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் உருவம் எப்போதும்
நெஞ்சையும் கண்களையும் விட்டு அகலவில்லை;
என்றும் கண்ணீர் விட்டு அழுகின்றோம்.

அன்னாரின் 32ஆம் நினைவு நாளான இன்று (13 - 03 - 97) வியாழக்கிழமை அந்தியேட்டிக்கிரியைகள் கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்று, 33ஆம் நாளான மறுநாள் வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்.**

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.

(45761)



# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

## சுப்பையாக் குருக்கள் வேதாரணியக் குருக்கள்

**(பிரதம குரு, வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோயில்)**

10 - 03 - 97 திங்கட்கிழமை விநாயகரடி சேர்ந்த வேவில் பிள்ளையார் கோயில் பிரதமகுரு ஸ்ரீலஸ்ரீ சு. வேதாரணியக் குருக்களின் ஆத்மா முத்திப்பேறடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**அகில இலங்கைச் சைவக் குருமார் சபை,**
**வடமராட்சிக்கிளை.**

(சி/295)


# மக்கள் அவலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

இதுவிடயத்தில் பாராமுகமாக நடந்து கொள்கின்றன.

வன்னிப்பகுதி மக்களுக்கு உணவு, மருத்துவப் பொருள்கள் சென்றடைவதனை இலங்கை அரசு தடுத்துள்ளது. மனிதாபிமானச் சட்டங்களை அரசு மீறியுள்ளது. ஆனால் இது குறித்து வெளி உலகத்துக்கு எதுவுமே தெரியாது.

—இவ்வாறு விடுதலைப் புலிகளின் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக செய்தி ஏஜன்சி ஒன்று தெரிவித்தது.

''கல்கத்தா ஸ்ரேற்மன்'' பத்திரிகையை மேற்கோள் காட்டி விடுதலைப் புலிகளின் அறிக்கையை ''த ஐலண்ட்'' பின்வருமாறு வெளியிட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 லட்சம் மக்கள் நிவாரணம் இன்றிக் கஷ்டமுறுகின்றனர்.

ஜனவரி தொடக்கம் வாகரைப்பகுதிக்குஉணவுகொண்டு செல்வதை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு நிறுத்தியதால், 17 ஆயிரம் மக்கள் கடந்த இரண்டு மாதங்களாக உணவு இன்றிக் கஷ்டப்படுகின்றார்கள்.

இந்த அநீதிகளை, சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூற செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தவறிவிட்டது.— என்று விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கருத்துக்கூற மறுத்து விட்டது.

ஏற்கனவே அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், எம். எஸ் எவ். மருத்துவ குழு ஆகியோரின் பணிகளையும் குறை கூறி விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டிருந்ததையும் 'த ஐலண்ட்' தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (அ-150-3)

## அழுகிய...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை — எட்டாம் திகதி — இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவரின்சடலமே இது என்று பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(அ-15)

## சுவரொட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)

போதும், தேர்தல் நடைமுறையை இந்தச் செயல் மீறியதாக முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்று தேர்தல் செயலகம் தெரிவித்தது. (இ-3-150)

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்)

பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்ற காலத்தில் அடுத்தவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று நினைத்துப் பார்த்ததில்லை. இன்று நாம் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்த்து சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிறிலங்காவின் எதிர்காலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு சமர்ப்பிக்கப்படவுள்ள அரசமைப்புச் சட்டம் இந்நாட்டு மக்களுக்கு வாழ்வா சாவா என்பதைத் தீர்மானிக்கும்.

தற்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவால் அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஆராயப்பட்டு வருகிறது.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசமைப்பு திருத்தம் குறித்து சிங்களத் தீவிரவாதிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவருவதால் அரசமைப்பு திருத்தம் குறித்த விளக்கங்களை மக்களுக்கு வழங்க வேண்டியது அவசியம்.

இப்படி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(இ-4-10)

## வீடுகளுக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்)

நேர அவகாசத்துடன் தங்கள் இருப்பிடங்களைச் சென்று பார்த்து வர நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் தங்கள் இருப்பிடங்களைத் தேடி அலைந்ததைக் காண முடிந்தது.

பலரது இருப்பிடங்கள் இருந்த இடம் தெரியாததால் உறவினர்களது வீடுகளுக்கேஅவர்கள்சென்றனர்.

குருநகர்கடற்கரையோரத்தில் உள்ள ஒரு சில குடும்பங்களின் இருப்பிடங்களில் இராணுவத்தினர் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-51)

# துப்பாக்கி...

(முதாலம் பக்கத் தொடர்)

பட்சமாக 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்க வகை செய்யும் புதிய விதிமுறைகள் அவசரகால விதிகளின் கீழ் பிறப்பிக்கப்படவுள்ளன. குறைந்தபட்ச தண்டனைக் காலம் 7 ஆண்டுகளாக இருக்கும்.

புதிய விதிமுறைகளின் கீழ் ஒருவருடைய வீட்டில் அல்லது வாகனத்தில் துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டால் அவருடைய வீடு அல்லது வாகனம் பறிமுதல் செய்யப்படும். உரிமம் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்கப்படமாட்டாது.

துப்பாக்கி முதலான ஆயுதங்களைப் பயன்படுத்துவதை மேலும் கடுமையாகக் கட்டுப்படுத்தும் இந்த நடவடிக்கைக்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு இருக்கிறது என்று சட்டம் மற்றும் அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறியுள்ளார்.

(இ-4)


உ

யாழ். நாயன்மார்கட்டு
அருள்மிகு
## ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தானம்
# வருடாந்த மஹோற்சவம்

1997 ஆம் ஆண்டு பங்குனி மாதம் (14 - 03 - 97) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

**மஹோற்சவ பிரதம குரு:**
**சிவஸ்ரீ சதா மகேஸ்வரக்குருக்கள்**
(நாயன்மார்கட்டு,
இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்)

**22 - 03 - 1997** சனிக்கிழமை காலை
**தேர்த் திருவிழாவும்**

**23 - 03 - 1997** ஞாயிற்றுக்கிழமை காலை
**தீர்த்த உற்சவமும்**
மாலை 4-40 மணிக்கு
**துவஜாவரோகணமும் நடைபெறும்.**

அனைவரும் வந்து பெருமானைத் தரிசித்து இறைவனின் அருளைப் பெறுவீர்களாக.

**ஆலய ஆதீனகர்த்தாக்கள்:**
1. ப. வினாயகமூர்த்தி ஐயர்,
2. முன்னாள் பிரதமகுருவும், ஆலய ஆதீனகர்த்தாவுமாகிய சோ. பாலசுந்தரக் குருக்களின் பேரனாகிய **சி. ஜதீஸ்வர ஐயர்**

(சி/294)



# மனவெளி

உளநலம் சம்பந்தப்பட்டது

இருமாதம் — ஒரு இதழ்

- வெற்றுக் குருவிக்கூட்டு நோய்க்குறித் தொகுதி
- இலக்கொன்று வேண்டும்
- இயல்பு நிலைப் பிறழ்வு
- ஒரு முழுமையின் இரு கூறுகள்
- மனம் என்றால் என்ன?
- பன்முக உளப்பாங்கு

தை — மாசி இதழ் வெளிவந்துவிட்டது!

தொடர்பு: 'சாந்திகம்',
15, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி.

(சி/290)



தவக்காலத்தை முன்னிட்டு
# திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
# பலிக்களம்

**(திருப்பாடுகளின் காட்சி)**

**14 - 03 - 1997 வெள்ளி . மிருசுவில் (காணிக்கை மாதா ஆலயம்)**
**16 - 03 - 1997 ஞாயிறு பருத்தித்துறை (கலட்டி த.க. பாடசாலை)**
**22 - 03 - 1997 சனி** } திருமறைக் கலாமன்ற அரங்கு
**23 - 03 - 1997 ஞாயிறு** } யாழ்ப்பாணம்.

**பிரவேசம் - இலவசம்**
**யாழ். திருமறைக் கலாமன்றம்**

(சி-288)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.